CC.No. 174/2022
PW – 1
19.05.2026
பெயர் : மணிகண்டன்
த/பெ. : முருகேசன்

**குறுக்கு விசாரணை**

நான் சம்பவ இடத்திற்கு வரும்போது அங்கு போலிசார் இருந்தார்கள். நான் வரும்போது அந்த சமயத்தில் அங்கு சுமார் 10 நபர்கள் கூடியிருந்தார்கள். நான் சம்பவ இடம் செல்லும்போது காயம்பட்ட நபர்கள் அங்குதான் இருந்தார்கள். அவர்களை எங்களுக்கு தெரிந்த ஆம்புலன்ஸ் வாகனத்தில் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். மருத்துவமனைக்கு நானும் எனது நண்பர்கள் சண்முகம், சூர்யா ஆகியோர் சென்றோம். சம்பவம் நடந்த சாலையானது தென்வடல் சாலை ஆகும். சம்பவம் நடந்த இடத்தில் இருந்து சுமார் 50 அடி தூரத்தில் பேருந்து நிறுத்தம் உள்ளது என்று சொன்னால் சரிதான். சம்பவ இடத்தில் வடக்கு பக்கம் சற்று போகபோக ஏற்றமாக இருக்கும் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தம்பி வந்த சாலை தென்வடல் சாலையில் இருந்து பிரிவு சாலை என்று சொன்னால் சரிதான். பிரிவு சாலையில் இருந்து தென்வடல் பிரதான சாலைக்கு வரும்போதுதான் விபத்து நடந்தது. பிரிவு சாலையில் இருந்து வரும்போது கவனமாக வரவேண்டும் என்று சொன்னால் சரிதான். இரு சக்கர வாகனத்தில் எனது தம்பி பின் இருக்கையில் அமர்ந்து வந்தார். இரு சக்கர வாகனத்தை சீனிவாசன் ஓட்டி வந்தார். அவருக்கு விபத்து சமயத்தில் இரு சக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது. மேற்படி சீனிவாசனுக்கு ஓட்டுநர் உரிமம் அந்த சமயத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 02.09.2022 தேதியில் காலை சுமார் 10 மணியளவில் நான் புகார் கொடுத்தேன். விபத்திற்கு இரு சக்கர வாகனத்தை ஓட்டிய சீனிவாசன் தான் காரணம் என்று அங்கிருந்த நபர்கள் என்னிடம் கூறினார்கள் என்று சொன்னால் சரியல்ல. அதனால்தான் நான் உடனடியான புகார் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. பின்னிட்டு யோசனை செய்து இந்த எதிரி மீது புகார்

கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மருத்துவமனைக்கு அழைத்து செல்லும்போது எங்களுடன் தனி வாகனத்தில் ஒரு போலிஸ் மட்டும் வந்தார். சீனிவாசனின் அப்பாவும் அண்ணனும் மருத்துவமனைக்கு வந்தார்கள். இரு சக்கர வாகனத்தி்ன முன்பகுதி சேதமாகி இருந்தது என்று சொன்னால் சரிதான். பேருந்தை எனது உறவினர்கள் சேதப்படுத்தினார்கள் என்று சொன்னால் சரியல்ல. இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்த சீனிவாசன் வாகனத்தை சரிவர ஓட்ட தெரியாமல் பேருந்து மீது மோதிவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. எனது தம்பிக்கு இழப்பீடு பெறும் வகையில் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/– மணிகண்டன்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.

CC.No. 174/2022
PW – 2
19.05.2026
பெயர் : ஆனந்தன்
த/பெ. : கருப்பையா

**குறுக்கு விசாரணை**

இறந்துபோன முத்துக்கருப்பனுக்கு நான் உறவினர் அல்ல. நான் குடியிருக்கும் இடத்தில் இருந்து விபத்து சம்பவம் நடைபெற்றஇடம் சுமார் 7 கி.மீ தூரம் இருக்கும். குமார் பட்டாணிக்கடை தெற்கு பார்த்து உள்ளது என்று சொன்னால் சரிதான். அதற்கு எதிரே காவல் நிலையம் உள்ளது என்று சொன்னால் சரிதான். சம்பவ இடத்தின் அருகே கடைகள் உள்ளது என்று சொன்னால் சரிதான். குமார் கடைக்கு எதிரே நான் தெற்கே பார்த்து நின்று பேசிக்கொண்டிருந்தேன். குறுக்கு சாலையில் இருந்து பிரதான சாலைக்கு செல்லும்போது தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். விபத்து சம்மந்தமாக நான் புகார் கொடுக்கவில்லை. இரு சக்கர வாகனத்தில் வந்த இருவரும் தலைகவசம் அணியவில்லை என்று சொன்னால் சரிதான். இரு சக்கர வாகனம் வேகமாக சென்று பேருந்து மீது மோதிவிட்டதா என்று கேட்டால் அதிக வேகமாக வந்த பேருந்து இரு சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டது. விபத்து நடந்த ரோடு இரு நான்கு சக்கர வாகனங்கள் செல்லும் அளவிற்கு அகலமான ரோடு என்று சொன்னால் சரிதான். குறுக்கு சாலையில் இருந்து பிரதான சாலைக்கு செல்லும்போது கவனமாக செல்லவேண்டும் என்று சொன்னால் இரு சக்கர வாகனத்தை ஓட்டி சென்றவர்கள் கவனமாக தான் சென்றார்கள். அ.சா.1 சாட்சி எனக்கு வேண்டியவர் என்பதால் அவருக்கு நஷ்ட ஈடு கிடைக்க வேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/– ஆனந்தன்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.
Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.

SC.No. 174/2022
PW – 3
19.05.2026
பெயர் : சுரேஷ்
த/பெ. : முத்தையா

<u>குறுக்கு விசாரணை</u>

அ.சா.2 சாட்சி எனக்கு பழக்கம். என் கண் முன்னால் தான் விபத்து நடந்தது. குறுக்கு சாலையில் இருந்து இரு சக்கர வாகனத்தில் வந்த நபர்கள் கவனிக்காமல் வந்த பேருந்து மீது மோதிவிட்டார்கள் என்று சொன்னால் இரு சக்கர வாகனத்தில் வந்தவர்களும், பேருந்து ஓட்டுநரும் இருவருமே கவனிக்காமல் வந்து தான் விபத்து நடந்தது. பேருந்து சாலையின் இடது ஓரத்தில் வந்தது என்று சொன்னால் சரியல்ல. சாலையின் நடுவில் தான் வந்தது. அ.சா.1 சாட்சிக்கு நஷ்டஈடு கிடைக்க வேண்டும் என்பதற்காக மிகைப்படுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சம்பவத்திற்கு பிறகு சம்பவம் நடந்த இடத்தில் காயம்பட்டவர்களை மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வரையில் அங்கேயே இருந்தேன். இரு சக்கர வாகனத்தில் வந்த நபர்கள் மீது தவறு இருந்ததால் தான் நாங்கள் அது குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லையா என்று கேட்டால் காயம்பட்ட நபரின் குடும்பத்தார் புகார் கொடுக்க வேண்டும் என்பதற்காக நாங்கள் புகார் கொடுக்கவில்லை. இறந்தவரின் உறவினர்கள் வந்தபிறகு நாங்கள் சம்பவ இடத்தில் இருந்து சென்று விட்டோம் என்று சொன்னால் சரிதான். விபத்திற்கு பேருந்து ஓட்டுநர் காரணம் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

Sd/– சுரேஷ்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.
Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.